# கொத்தமல்லி பயிரிட்டு இலாபம் பெறலாம்

இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் நறுமண பயிர்களில் கொத்தமல்லி முக்கியமானதாகும். 2015-2016 ஆம் ஆண்டில் 5.85 லட்சம் எக்டர் நிலப்பரப்பளவில் பயிரிடப்பட்டு 4.91 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றது. குஜராத், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, ஒரிசா மற்றும் தமிழ்நாடு ஆகியவை கொத்தமல்லி உற்பத்தி செய்யும் மற்ற மாநிலங்களாகும். தமிழ்நாட்டின் மொத்த கொத்தமல்லி சாகுபடியில் இராமநாதபுரம், விருதுநகர், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மட்டும் 85 சதவிகிதம் பயிரிடப்படுகிறது. கொத்தமல்லி குளிர்கால பயிராக பயிரிடப்பட்டு அக்டோபர்-நவம்பர் மாதங்களில் விதைக்கப்படுகின்றது.

இந்தியாவில் கொத்தமல்லி ஏற்றுமதி கடந்த இரண்டு ஆண்டுகளில் 22 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அதாவது 2012-13 ஆம் ஆண்டில் 35,902 டன்னிலிருந்து 46,000 டன்னாக 2014-15 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது. மலேசியா, ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா, நேபாளம், தென் ஆப்பிரிக்கா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை கொத்தமல்லி ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளாகும். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கொத்தமல்லியில் 50 சதவிகிதம் நறுமணம் மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றது. மார்ச்சிலிருந்து மே மாதம் வரை அறுவடை காலம் என்பதால் கொத்தமல்லியின் சந்தை வரத்து அம்மாதங்களில் அதிகமாக காணப்படுகின்றது.

வர்த்தக மூலங்களின்படி இராஜஸ்தானில் அதிக மழை காரணமாக கொத்தமல்லியின் வரத்து பிப்ரவரி-மார்ச் மாதங்களில் குறையும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கொத்தமல்லி தரம் குறைந்து காணப்பட்டாலும் விலை குறைவாகவுள்ளதால் வர்த்தகம் செய்யப்படுகிறது. மற்ற மாநிலங்களின் உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்யப்படும் கொத்தமல்லி விலையில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கொத்தமல்லியில்

தரம், மணம் உயர்வாக இருப்பதால், தமிழ்நாட்டின் கொத்தமல்லிக்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 15 ஆண்டுகளாக விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவி வரும் கொத்தமல்லி விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கொத்தமல்லிக்கு அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூபாய் 8,500 கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவு முடிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.


<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641003
தொலைபேசி – 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641003
தொலைபேசி – 0422-6611284